**மகளிர் நீதிமன்றம், (மகிளா விரைவு நீதிமன்றம்)**

**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்.**

**முன்னிலை:- திரு.ஏ.லியாகத் அலி, பி.காம்., பி.எல்.,**

**அமர்வு நீதிபதி, திருவில்லிபுத்தூர்.**

**2018ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ஆம் நாள் சனிக்கிழமை**

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்.01/2018</u>**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக குற்ற முறையிடுபவர்** | | காவல் ஆய்வாளர்,<br>இருக்கன்குடி காவல் நிலையம்,<br>குற்ற எண்.183/2016. |
| **எதிரி** | | திருக்குமரன், வயது 28/16,<br>த/பெ ஆறுமுகம்,<br>224- தெற்கு தெரு,<br>சிந்தாமணி,<br>தென்காசி தாலுகா,<br>திருநெல்வேலி மாவட்டம். |
| **எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள்** | | |
| குற்றச்சாட்டுக்கள் | | எதிரியின் மீது இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ். |
| எதிரியின் வழக்குரை | | குற்றவாளி இல்லை. |
| நீதிபதியின் தீர்மானம் | | எதிரி இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| தண்டனை அல்லது உத்தரவு | | எதிரியை இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு, கடந்த 29.10.2018ம் தேதி, இறுதியாக இம்மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அரசுக்காக, கற்றறிந்த அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் திருமதி.M.மலர்விழி பி.ஏ.பி.எல்., அவர்கள் ஆஜராகியும், எதிரியின் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோவிந்தராஜ்,

எம்.ஏ.பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இவ்வழக்கு, இதுவரை, இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இருதரப்பு வாதுரை, சான்றாவணங்கள், சாட்சியங்களை, பரிசீலித்து, இன்று, இம்மன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

இருக்கன்குடி காவல் நிலைய ஆய்வாளர் எதிரியின் மீது இ.த.ச பிரிவு 366 மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் பிரிவுகள் 3, 4, 5(l), 6, 7, 8 மற்றும் குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 -ன் கீழான குற்றங்களுக்கு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்.

**அரசு தரப்பில் தாக்கல் செய்த குற்றஅறிக்கையின் விவரம் வருமாறு :**

இவ்வழக்கின் புகார்தாரர்/சாட்சி திருமதி. அமுதா என்பவர் விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தாலுகா, இருக்கண்குடி தெற்குதெரு கதவு எண்.2/171-ல் குடியிருந்து வருகிறார். இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சுமார் 17 வயதுள்ள இளம்சிறார் பெண் இளையராணி புகார்தாரர்/சாட்சியின் மகளாவார். எதிரி மார்ஜினில் கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறார். புகார்தாரர்/சாட்சி இருக்கண்குடி கோவில் தெரு ஆற்று பக்கம் செட்டு வைத்து தொழில் செய்து வருகிறார். சம்பவ சமயத்தில் புகார்தாரர்/சாட்சியின் மகளான இளஞ்சிறார் பெண் இளையராணி N.மேட்டுப்பட்டியில் உள்ள நென்மேனி சீ.இரா.மேல்நிலைப் பள்ளியில் 12-ம் வகுப்பு படித்து வந்துள்ளார்.

கடந்த 11.08.2016-ம் தேதி ஆடி கடைசி வெள்ளிக்கு புகார்தாரர்/சாட்சி வைத்திருந்த செட்டிற்கு தென்காசி அருகில் உள்ள சிந்தாமணி ஊரைச் சேர்ந்த எதிரி குடும்பத்தினர் வந்து தங்கியுள்ளனர். அப்போது எதிரி இளம்சிறார் பெண்ணிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி பேசி வந்துள்ளார்.

அதன்பிறகு எதிரிக்கும், இளஞ்சிறார் பெண்ணுக்கும் நன்கு பழக்கம் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் நேசித்து வந்துள்ளனர். பின்னர் அதற்கு மறுவாரம் சனிக்கிழமை அன்று எதிரி, புகார்தாரர்/சாட்சியின் ஊரான இருக்கண்குடி வந்து இளஞ்சிறார் பெண்ணுக்கு Samsung என்ற புதிய செல்போனை வாங்கி கொடுத்து அடிக்கடி இருவரும் செல்போனில் பேசி பழகி வந்துள்ளனர். அதன்பிறகு கடந்த 29.08.2016-ம் தேதி இளஞ்சிறார் பெண் எதிரியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது பார்த்துவிட்டு புகார்தாரர்/சாட்சியும், இளஞ்சிறார் பெண்ணின் சகோதரர் சாட்சி இருளப்பசாமியும் கண்டித்து இனிமேல் நீ பள்ளிக்கூடம் செல்லவேண்டாம் என்று சொல்லி மறுநாள் 30.08.2016ம் தேதி அன்று பள்ளிக்கு அனுப்பாமல் இருந்துள்ளனர். 31.08.2016ம் தேதி

காலையில் இளஞ்சிறார் பெண் புகார்தாரர்/சாட்சியிடமும், சாட்சி இருளப்பசாமியிடமும் நான் இனிமேல் இப்படி செய்யமாட்டேன் ஒழுங்காக பள்ளிக்கூடம் சென்று வருகிறேன் என்று சொல்லியதால் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். காலை 8.30 மணிக்கு இளஞ்சிறார் பெண் தன் வீட்டிலிருந்து புறப்பட்டு பள்ளிக்கு சென்றுள்ளார். அதனைத் தொடர்ந்து அதே தினம் 31.08.16ம் தேதி காலை பள்ளிக்கு சென்ற இளஞ்சிறார் பெண் 11.00 மணியளவில் வயிற்றுவலி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துள்ளார். அப்போது மேற்படி எதிரி அழைத்ததின் பேரில் இளஞ்சிறார் பெண் தென்காசி சென்றதும் அங்கிருந்து எதிரி பாலியல் எண்ணத்துடன் தனது வீட்டிற்கு கடத்தி சென்றதும், தனது வீட்டில் முறையின்றி சிறை வைத்துள்ளார். அவ்வாறு கடத்தி செல்லும்போது ஒன்றாக அமர்ந்து உடல் உரசலை ஏற்படுத்தி கடத்தி சென்றுள்ளார். அதன்பிறகு கடந்த 1.09.16ம் தேதி காலை 10.00 மணிக்கு தென்காசி தோரணமலை முருகன் கோவிலில் வைத்து 18 வயது பூர்த்தியடையாத இளஞ்சிறார் பெண்ணின் கழுத்தில் மஞ்சளுடன் மஞ்சள் தாலி கயிறு கட்டியுள்ளார். வயதுக்கு வந்த எதிரி, 18 வயது நிரம்பாத இளஞ்சிறார் பெண்ணை முறையின்றி குழந்தை திருமணம் செய்துள்ளார். அதன்பிறகு எதிரி, இளம்சிறார் பெண்ணை தென்காசியில் உள்ள தனது ஊரான சிந்தாமணியிலிருந்து சென்னைக்கு கடத்தி சென்று அங்கு கீழ்க்கட்டளை அருகில் உள்ள செந்தில் நகர் 1வது தெருவில் உள்ள ஒரு வீட்டில் முறையின்றி சிறை வைத்துள்ளார். அங்கு வைத்து எதிரி இளஞ்சிறார் பெண்ணை கட்டாயப்படுத்தி முதல் முறையாக உட்செலுத்துதல் பாலியல் தாக்குதல் செய்துள்ளார். அங்கு தங்கியிருந்த நாட்களில் எதிரி பலமுறை இளஞ்சிறார் பெண்ணை உட்செலுத்துதல் பாலியல் தாக்குதல் செய்துள்ளார், அதன்பிறகு புகார்தாரர்/சாட்சி, இருக்கண்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீஸ் தன்னை தேடி வரும் தகவல் தெரிந்து எதிரி, இளஞ்சிறார் பெண்ணை சென்னையிலிருந்து சாத்தூர் பஸ் நிலையத்திற்கு கடத்தி வந்து அங்கு நின்று கொண்டிருந்தபோது இருக்கண்குடி போலீஸ் அவர்கள் இருவரையும் இருக்கண்குடி காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரித்து இளஞ்சிறார் பெண்ணை புகார்தாரர்/சாட்சியிடம் ஒப்படைத்துள்ளனர்.

எனவே, எதிரியானவர் பாலியல் எண்ணத்துடன் இளஞ்சிறார் பெண்ணிடம் திருமண ஆசை கூறி, இருக்கண்குடியில் இருந்து தென்காசி, சிந்தாமணி, சென்னை ஆகிய இடங்களுக்கு கடத்தி சென்ற குற்றத்திற்கு பிரிவு 366 இதச படியும், பஸ்ஸில் கடத்தி செல்லும் பொழுது ஒன்றாக அமர்ந்து உடல் உரசலை ஏற்படுத்திய குற்றத்திற்கு பிரிவு 7 உ/இ 8 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012ன் படியும், முதல் முறையாக உட்செலுத்துதல் பாலியல் தாக்குதல் குற்றத்திற்கு பிரிவு 3 உ/இ 4 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012ன் படியும், குழந்தை திருமணம் செய்த குற்றத்திற்கு பிரிவு 9 குழந்தைகள் திருமண தடை சட்டம் 2009ன் படியும், அதன் தொடர்ச்சியாக தொடர்ந்து பலமுறை உட்செலுத்துதல் பாலியல் தாக்குதல் செய்த குற்றத்திற்கு பிரிவு 5(l) உ/இ 6 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் 2012ன் படியும்

தண்டிக்கப்படவேண்டியவராகிறார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) இருக்கன்குடி காவல் நிலைய ஆய்வாளர், குற்ற இறுதி அறிக்கையை, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்நீதிமன்றம், குற்ற இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து, கடந்த, 02.01.2018ம் தேதி, விசாரணைக்காக, கோப்பில் சேர்த்து எதிரிக்கு, அழைப்பாணை அனுப்ப இம்மன்றம் உத்தரவிட்டது.

3) எதிரி, அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு, குவிமுச பிரிவு 207 - ன் கீழ், வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, வழக்காவணங்களை பரிசீலிக்க, நீதிமன்றம் போதிய அவகாசத்தை எதிரிக்கு வழங்கியிருக்கிறது.

4) இருதரப்பையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலித்து, நீதிமன்றம், எதிரியின் மீது இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக்கூறி, விசாரிக்க, எதிரி, குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்.

5) எதிரியின் மீது, கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க, அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். அரசு தரப்பில் 13 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) <u>அரசு தரப்பில் சாட்சிகள் கொடுத்த சாட்சியங்களின் சுருக்கம் வருமாறு</u> :**

அ.சா.1 - பாதிக்கப்பட்ட குழந்தை, தனது சாட்சியத்தில், தான் தற்போது தென்காசியிலுள்ள சிந்தாமணியில் குடியிருக்கிறதாகவும், தற்போது தனக்கு வயது 19 ஆகிறது என்றும் வழக்கு சமயத்தில் இருக்கன்குடியில் தன் பெற்றோருடன் குடியிருந்து வந்ததாகவும், தன் பெற்றோர்கள் கூலி வேலை செய்கின்றனர் என்றும் சம்பவ சமயத்தில் நென்மேனியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு படித்ததாகவும், எதிரியை தெரியும் என்றும் எதிரி சிறு வயதிலிருந்தே தன் குடும்பத்திற்கு பழக்கமானவர் என்றும் தங்கள் ஊருக்கு அடிக்கடி வந்துபோவார் என்றும் 31.08.2016ம் தேதி சரியாக தான் படிக்காத காரணத்தால், தன் அம்மா திட்டியதால், தான் கோபப்பட்டு தென்காசியில் உள்ள தன் உறவினர் வீட்டிற்கு சென்று விட்டதாகவும், தான் காணாமல் போய்விட்டேன் என்று தன் அம்மா போலீசாரிடம் புகார் கொடுத்திருப்பது தெரிந்து, மறுநாள் தான் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், எதிரிக்கும், தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் எதிரி தன்னை கடத்தி சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை என்றும் எதிரி தன்னை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை என்றும் பாலியல் தாக்குதலும் செய்யவில்லை என்றும் எதிரி தன்னை திருமணம் எதுவும் செய்து

கொள்ளவில்லை என்றும் தன்னுடன் அவா் உடலுறவும் கொள்ளவில்லை என்றும் இதற்கு முன்பு விருதுநகா் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதனை தான் விருப்பப்பட்டு கொடுக்கவில்லை என்றும் போலீசாா் சொன்னதின் பேரில் தான் கொடுத்ததாகவும், வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறெதுவும் தெரியாது என்றும் போலீசாா் தன்னை விசாரித்தாா்கள் என்றும் கூறி பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளாா்.

அ.சா.2 - திருமதி.அமுதா, தனது சாட்சியத்தில், தான் தற்போது இருக்கன்குடியில் குடியிருக்கிறதாகவும், கூலி வேலை செய்கிறதாகவும், அ.சா.1 தன் மகள் என்றும் தற்போது தன் மகளுக்கு 19 வயதாகிறது என்றும் எதிரியை தெரியும் என்றும் 31.08.2016ம் தேதி தன் மகள் வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டாா் என்றும் தன் மகள் காணாமல் போய்விட்டதால் தான் இருக்கன்குடி போலீசாரிடம் புகாா் கொடுத்ததாகவும், வெள்ளைப் பேப்பரில் போலீசாா் தன்னிடம் கையெழுத்து வாங்கினாா்கள் என்றும் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தனக்கு தெரியாது என்றும் புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 என்றும் பிறகு மறுநாள் தன் மகள் வீட்டிற்கு வந்துவிட்டாா் என்றும் அவரை தான் கேட்டபோது அவா் படிக்காத காரணத்தால், தான் திட்டியதை வைத்து கோபித்து கொண்டு தங்கள் உறவினா் வீட்டிற்கு சென்றுவந்ததாக கூறினாா் என்றும் எதிரிக்கும், தன் மகளுக்கும் எந்த தொடா்பும் இல்லை என்றும் எதிரி தன் மகளை கடத்திச் சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை என்றும் எதிரி தன் மகளை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை என்றும் பாலியல் தாக்குதலும் செய்யவில்லை என்றும் எதிரி தன் மகளை திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றும் தன் மகளுடன் அவா் உடலுறவும் கொள்ளவில்லை என்றும் வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறெதுவும் தெரியாது என்றும் போலீசாா் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி, பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டிருக்கிறாா்.

அ.சா.3 - திரு.இருளப்பசாமி, தனது சாட்சியத்தில், தான் தற்போது இருக்கன்குடியில் குடியிருக்கிறதாகவும், அ.சா.1 தன் தங்கை என்றும் அ.சா.2 தன் அம்மா என்றும் தற்போது தன் தங்கைக்கு 19 வயதாகிறது என்றும் எதிரியை தெரியும் என்றும் 31.08.2016ம் தேதி தன் தங்கை வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டாா் என்றும் தன் தங்கை காணாமல் போய்விட்டதால், அ.சா.2 இருக்கன்குடி போலீசாரிடம் புகாா் கொடுத்தாா் என்றும் பிறகு மறுநாள் தன் தங்கை வீட்டிற்கு வந்துவிட்டதாக தன் அம்மா கூறினாா் என்றும் எதிரிக்கும், தன் தங்கைக்கும், எந்த தொடா்பும் இல்லை என்றும் எதிரி தன் தங்கையை கடத்திச்சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை என்றும் எதிரி தன் தங்கையை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை என்றும் பாலியல் தாக்குதலும் செய்யவில்லை என்றும் எதிரி தன் தங்கையுடன் திருமணம் எதுவும் செய்து கொள்ளவில்லை என்றும் தன் தங்கையுடன் அவா் உடலுறவும் கொள்ளவில்லை என்றும் வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறெதுவும் தெரியாது என்றும் போலீசாா் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி, பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளாா்.

அ.சா.4.திருமதி.சுமதி, சார்பு ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது சாத்தூர் மதுவிலக்குஅமல் பிரிவில் சார்பாய்வாளராக பணிபுரிகிறதாகவும், கடந்த 02.09.2016ம் தேதி இருக்கன்குடி காவல்நிலையத்தில் சார்பாய்வாளராக பணியிலிருந்தபோது 17.30 மணிக்கு அர்ஜுனன் மனைவி அமுதா நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இருக்கன்குடி காவல்நிலைய குற்ற எண் 183/16ல் இதச பிரிவு 366-Aன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் இணைத்து சாத்தூர் நீதித்துறை நடுவர் மன்றம் எண்-2ற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை இருக்கன்குடி வட்ட ஆய்வாளர் மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பிலும் வைத்ததாகவும், அமுதா கொடுத்த புகார் மனு அ.சா.ஆ 2 என்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும் பிறகு 10.10.2016ம் தேதி 15.00 மணிக்கு ஆய்வாளரின் உத்தரவுப்படி தனக்கு கிடைத்த தகவலின் படி காணாமல் போன சிறுமியின் புகைப்படத்துடன் சாத்தூர் பஸ் நிலையம் சென்று அங்கு நின்று கொண்டிருந்த இளையராணியையும், எதிரி திருக்குமரனையும் கண்டுபிடித்து 17.30 மணிக்கு காவல் ஆய்வாளர் முன்பு ஆஜர்படுத்தியதாகவும், அப்போது காவல் ஆய்வாளர் கடத்தப்பட்ட சிறுமியை விசாரித்த போது தானும் உடனிருந்ததாகவும், ஆய்வாளரின் வேண்டுகோளின் படி சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக தானும், பெண் தலைமைக்காவலர் 1035 திருமதி.சுப்புலட்சுமியும் கூட்டிசென்று பரிசோதனைக்கு உட்படுத்தி பரிசோதனை முடிந்தபிறகு விருதுநகரிலுள்ள காப்பகத்தில் ஒப்படைத்ததாகவும், பிறகு கடத்தப்பட்ட சிறுமியின் பெற்றோர் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்ததின் பேரில் 17.10.2016ம் தேதி சிறுமியை காப்பகத்திலிருந்து எடுத்துகொண்டு உயர்நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், அங்கு சிறுமி பெற்றோரிடம் செல்ல மறுத்துவிட்டதால், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி விருதுநகர் காப்பகத்தில் ஒப்படைத்து, பிறகு ஸ்ரீவில்லிபுத்தூர் மகிளா நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், பிறகு 22.10.2016ம் தேதி மகிளா நீதிமன்ற உத்தரவுப்படி குவிமுச பிரிவு 164ன் கீழ வாக்குமூலம் பெறுவதற்கு சிறுமியை விருதுநகர் நீதித்துறை நடுவர் மன்றம் எண் - 1 ல் ஆஜர் செய்து வாக்குமூலம் பெறப்பட்டு மீண்டும் காப்பகத்தில் சிறுமியை ஒப்படைத்ததாகவும், இதுசம்மந்தமாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சொல்லியுள்ளார்.

அ.சா.5.திரு.முத்து, காவல் ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது மதுரை மாவட்டம், நாகமலைப்புதுக்கோட்டை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறதாகவும், கடந்த 02.09.2016ம் தேதி தான் இருக்கன்குடி வட்ட காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது இருக்கன்குடி காவல்நிலைய குற்றஎண் 183/16 வழக்கில் சார்பாய்வாளர் சுமதி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து வைத்திருந்ததை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினம் 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் நீராத்திலிங்கம், சண்முகையா முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ 4 என்றும் வரைபடம் அ.சா.ஆ.5 என்றும் அன்றைய தினமே சாட்சிகள் அமுதா, அர்ஜீனன் மகன் இருளப்பசாமி, பாலசுப்பிரமணியன் மகன் இருளப்பசாமி, பூச்சையன் மகன் இருளப்பசாமி, இசக்கிமுத்து, இசக்கிராஜ், ரத்தினகுமார், ஈஸ்வரன், எதிரியின் தகப்பனார் ஆறுமுகம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 10.10.2016ம் தேதி பெண் சார்பாய்வாளர் சுமதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட இளையராணியையும், எதிரி திருக்குமரனையும் தன் முன்னிலையில் ஆஜர்படுத்தினார் என்றும் பெண் சார்பாய்வாளர் முன்னிலையில் கடத்தப்பட்ட இளையராணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் எதிரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன் அடிப்படையில் அன்றைய தேதியிலேயே வழக்கின் சட்டப்பிரிவை 366 - A லிருந்து இதச பிரிவுகள் 366 -A, 376 , r/w 5 (l) 7, 8 மற்றும் 18 POCSO Act 2012 படி மாறுதல் செய்து மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும் எதிரி திருக்குமரனை அன்றைய தினம் 18.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாகவும், இளஞ்சிறுமி இளையராணியை பெண் தலைமைக் காவலர் 1035 திருமதி.சுப்புலட்சுமி மூலம் மருத்துவ பரிசோதனைக்கு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும், அவரை பரிசோதித்த டாக்டர்.முனிராவை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவர் இளையராணிக்கு கொடுத்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.7 என்றும் 21.10.2016ம் தேதி எதிரியை மருத்துவ பரிசோதனை செய்ய நீதிமன்றம் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து தகுந்த காவலர் மூலம் மருத்துவ பரிசோதனைக்கு சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பியதாகவும், எதிரி திருக்குமரனை பரிசோதனை செய்த மருத்துவர் அமர்நாத்தை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அவர் எதிரிக்கு கொடுத்த விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.8 என்றும் 24.10.2016ம் தேதி சாட்சி மரியதாஸை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட இளஞ்சிறுமி இளையராணியிடம் குவிமுச பிரிவு 164ன் கீழ் வாக்குமூலம் பெறுவதற்கு வேண்டுகோள் கடிதத்தை சார்பாய்வாளர் சுமதி மூலம் நீதிமன்றம் அனுப்பப்பட்டு, 25.10.2016ம் தேதி விருதுநகர் நீதித்துறை நடுவர் எண் -1ல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும், அந்த 164 குவிமுச பிரிவு வாக்குமூலம் அ.சா.ஆ.9 என்றும் பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட இவ்வழக்கின் தடயப் பொருட்களை ஆய்விற்கு அனுப்பியதாகவும், சாட்சிகள் காவலர்கள் ராஜீவ்காந்தி, மாதவன், பசுபதி, சுப்புலட்சுமி, சார்பாய்வாளர் சுமதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இவ்வழக்கானது பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்ட வழக்காக இருப்பதால் அத்துடன் தனது விசாரணையை முடித்து வழக்கின் கோப்பை மேல் விசாரணைக்காக சாத்தூர் அனைத்து மகளிர் காவல் ஆய்வாளர் கீதாரமணியிடம் விசாரணைக்கு அனுப்பி வைத்ததாகவும், அவருடைய

கையெழுத்துக்கள் தனக்கு தெரியும் என்றும் அவர் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 27.10.2016ம் தேதி தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் விஜயேந்திரனை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் அவர் கொடுத்த உயிரியல் அறிக்கை அ.சா.ஆ.10 என்றும் குருதிவடிநீரியல் அறிக்கை அ.சா.ஆ.11 என்றும் பிறகு 20.12.2016ம் தேதி தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளர் விஜயேந்திரனை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் அன்றைய தினமே இவ்வழக்கில் குற்ற செயல்களில் ஈடுபடாத மற்ற எதிரிகளான பாபு, சேகர், சிலிண்டர் முருகன் ஆகியோர்களை நீக்கம் செய்து அறிக்கையை ஸ்ரீவில்லிபுத்தூர் மகிளா நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும் பிறகு 21.12.2016ம் தேதி தலைமையாசிரியர் துரைராஜை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு கொடுத்த பிறந்த தேதி குறித்த சான்றிதழ் அ.சா.ஆ.12 என்றும் பின்பு சாட்சிகள் ராஜா, ஆறுமுகம், மாடசாமி, ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் பிறகு 02.02.2017ம் தேதி இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 366 -A, 376 , r/w 5 (l) 7, 8 மற்றும் 18 POCSO Act 2012 லிருந்து 366 இதச மற்றும் 7, 8, 3 r/w 4, 5(l) r/w 6 POCSO Act 2012 மற்றும் Sec 9 Child Marriage Act 2006ன் கீழ் மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் என்றும் அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 என்றும் பிறகு அதே தினத்தில் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி திருக்குமரன் மீது 366 இதச மற்றும் 7, 8, 3 r/w 4, 5(l) r/w 6 POCSO Act 2012 மற்றும் Sec 9 Child Marriage Act 2006ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் கூறியிருக்கிறார்.

7) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிந்த பின்பு அரசு தரப்பு சாட்சியங்களில் உள்ள எதிரிக்கு பாதகமான விசயங்களை பொறுத்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ) - ன் படி, எதிரியிடம் வினவியபோது, எதிரி மேற்படி சாட்சியங்களை மறுத்துள்ளார்.

8) எதிரி தரப்பில், சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

9) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

**<u>10) எதிரி தரப்பு வாதம்</u> :**

பாதிக்கப்பட்ட குழந்தையை, எதிரி கடத்திச் சென்று, மறைத்து வைத்திருந்து, குழந்தை திருமணம் செய்து கொண்டு, பலமுறை கடுமையான உட்செலுத்துதல் பாலியல் தாக்குதல் செய்துள்ளார் என்ற விபரம் அரசு தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்றும் வழக்கின் முக்கிய சாட்சிகளான பாதிக்கப்பட்ட குழந்தையும், குழந்தையின் தாயாரும், பாதிக்கப்பட்ட

குழந்தையின் சகோதரரும், அரசு தரப்பு வழக்கினை எடுத்துக்காட்டாமல் பிறழ் சாட்சிகளாக மாறியிருக்கிறார்கள். எனவே, எதிரியை நேரடியாக குற்றச்சாட்டோடு தொடர்புபடுத்திக் கூற வேறு சாட்சியங்கள் எதுவும் இல்லாததால், அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க தவறிவிட்டதென எதிரி தரப்பில் வாதிடப்பட்டது.

**<u>11) அரசு தரப்பு வாதம்</u> :**

அரசு தரப்பு வழக்கறிஞர், சாட்சியம் மற்றும் தகுதியின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கை முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**<u>12) தீர்வுக்குரிய பிரச்சனை :</u>**

எதிரியின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள், அரசு தரப்பிலிருந்து, சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

13)இவ்வழக்கில் நடந்துள்ள சம்பவத்தை பற்றி காணும்போது வழக்கின் முக்கிய சாட்சிகளான பாதிக்கப்பட்ட குழந்தையாக கூறப்படும் அ.சா.1, அவரின் தாயாரும், புகார்தாரருமான அ.சா.2 மற்றும் அ.சா.1ன் சகோதரரும், அ.சா.2ன் மகனுமான அ.சா.3 ஆகியோர் அளித்துள்ள சாட்சியங்கள் இவ்வழக்கின் சூழ்நிலையில் முக்கியமானதாக அமைந்துள்ளது. அ.சா.1 - ன் தாயாரும், புகார்தாரருமான அ.சா.2 அவரின் சாட்சியத்தில்,

> "31.8.2016ம் தேதி என் மகள் வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டாா. என் மகள் காணாமல் போய்விட்டதால் நான் இருக்கன்குடி போலீசாரிடம் புகார் கொடுத்தேன்."

என்றும்,

> "பிறகு மறுநாள் என் மகள் வீட்டிற்கு வந்துவிட்டார். அவரை நான் கேட்டபோது அவர் படிக்காத காரணத்தால் நான் திட்டியதை வைத்து கோபித்துக்கொண்டு எங்கள் உறவினர் வீட்டிற்கு சென்று வந்ததாக கூறினார். எதிரிக்கும், என் மகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை. எதிரி என் மகளை கடத்திச்சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை. எதிரி என் மகளை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை. பாலியல் தாக்குதலும் செய்யவில்லை. எதிரி என் மகளை திருணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. என் மகளுடன் அவர் உடலுறவும் கொள்ளவில்லை."

என்றும் சொல்லி, அரசு தரப்பின் வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியிருக்கிறார். அ.சா.2 அளித்துள்ள சாட்சியத்தை காணும்போது, அவரின் மகளான பாதிக்கப்பட்ட குழந்தைக்கு எதிரி எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்பதை தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பதும்,

போலீசாரிடம் கொடுத்துள்ள புகாரில் கூறியுள்ள அம்சங்களுக்கு மாறாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருக்கிறார் என்பதும் நன்கு தெரிகிறது. மேலும் அ.சா.1ன் சகோதரரும், அ.சா.2ன் மகனுமான, அ.சா.3 அவரின் சாட்சியத்தில், அ.சா.2 கூறியிருப்பது போலவே சாட்சியம் அளித்து அரசு தரப்பிற்கு விரோதமாக பிறழ் சாட்சியாகியிருக்கிறார். இவ்வாறான நிலையில், பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை கவனமாக பரிசீலித்து பார்க்கவேண்டும். அ.சா.1 அவரின் சாட்சியத்தில்,

> "31.8.2016ம் தேதி சரியாக நான் படிக்காத காரணத்தால் என் அம்மா திட்டியதால் நான் கோபப்பட்டு தென்காசியில் உள்ள என் உறவினர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் காணாமல் போய்விட்டேன் என்று என் அம்மா போலீசாரிடம் புகார் கொடுத்திருப்பது தெரிந்து மறுநாள் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எதிரிக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை. எதிரி என்னை கடத்திச்சென்று எந்த இடத்திலும் வைக்கவில்லை. எதிரி என்னை பாலியல் ரீதியாக எதுவும் செய்யவில்லை. பாலியல் தாக்குதலும் செய்யவில்லை. எதிரி என்னை திருணம் எதுவும் செய்து கொள்ளவில்லை. என்னுடன் உடலுறவும் கொள்ளவில்லை."

என்றும் சொல்லி அரசு தரப்பின் வழக்கினை எடுத்துக்காட்டாமல் பிறழ் சாட்சியாக மாறியிருக்கிறார். அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை காணும்போது, எதிரி, அவரை கடத்திச் சென்று, திருமணம் செய்து கொண்டு, பாலியல் ரீதியாக எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை பற்றி எவ்வித சாட்சியமும் அளிக்காமல் தனக்கு எதிராக எதிரி பாலியல் ரீதியான குற்றம் நிகழ்த்தவில்லை என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளாரென விளங்குகிறது. எனவே, அ.சா.1 முதல் அ.சா.3 அளித்துள்ள சாட்சியங்களை பரிசீலித்து பார்க்கும்போது, அரசு தரப்பில் கூறப்படுவதுபோல் கூறப்படும் விதத்தில், கூறப்படும் முறையில் சம்பவம் நடந்திருக்குமா? என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது.

14)அரசு தரப்பில், விருதுநகர், நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1, கு.வி.மு.ச பிரிவு 164 - ன் கீழ் நடந்துள்ள சம்பவத்தைப்பற்றி வாக்குமூலம் கொடுத்துள்ளதாக சொல்லப்படுகிறது. மேற்படி வாக்குமூலம் இவ்வழக்கில் அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1 அவரின் சாட்சியத்தில்,

> "இதற்கு முன்பு விருதுநகர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தேன். அதனை நான் விருப்பப்பட்டு கொடுக்கவில்லை. போலீசார் சொன்னதின் பேரில் தான் கொடுத்தேன்."

என்று சொல்லி பிறழ் சாட்சியாக மாறியிருக்கிறார். குறிப்பாக நீதிமன்றத்தில் அ.சா.1 அவரின்

சாட்சியத்தில் நீதித்துறை நடுவரிடம் தான் விருப்பப்பட்டு வாக்குமூலம் கொடுக்கவில்லை என்று தெளிவாக ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை காணும்போது, நீதித்துறை நடுவரிடம், அவர் தன்னிச்சையாக வாக்குமூலம் கொடுக்கவில்லையென தெரிகிறது. ஆகவே, அ.சா.ஆ.9ல் கூறியிருப்பதற்கு மாறாக நீதிமன்றத்தில் அ.சா.1 சாட்சியம் அளித்திருக்கிறார் என விளங்குகிறது.

15) அரசு தரப்பில், எதிரியானவர், பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1ஐ, பலமுறை கொடூர பாலியல் தாக்குதல் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. மேற்படி கூற்றிற்கு ஆதரவான மருத்துவ சாட்சியம் இவ்வழக்கில் அமைந்துள்ளதா? என்பதை பற்றி பார்க்கும்போது, அ.சா.1வுக்கு வழங்கப்பட்டுள்ள விபத்துப் பதிவேட்டு சான்றிதழான அ.சா.ஆ,7ல் வன்புணர்ச்சி செய்ததற்கான அறிகுறிகள் இல்லை என்றும் அந்நியர் ரோமம் எதுவும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உயிரியல் அறிக்கையான அ.சா.ஆ.10லும் விந்தணுக்கள் எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, அ.சா.1 அவரின் சாட்சியத்தில் தனக்கு எதிராக யாரும் பாலியல் ரீதியான குற்றம் நிகழ்த்தவில்லை என்று கூறியிருக்கிறார். அ.சா.1க்கு வழங்கப்பட்டுள்ள விபத்துப்பதிவேட்டு சான்றிதழான அ.சா.ஆ.7லிருந்தும், உயிரியல் அறிக்கையான அ.சா.ஆ.10 லிருந்தும், அரசு தரப்பில் கூறப்படுவது போல், அ.சா.1க்கு ஆதரவான மருத்துவ சாட்சியம் இவ்வழக்கில் தெளிவாக அமையவில்லை எனத் தெரிகிறது.

16)இவ்வழக்கின் புகாரைப் பற்றி காணும்போது, இவ்வழக்கில் புகாரை பெற்றுள்ள அ.சா.4 சார்பு ஆய்வாளர் அவரின் சாட்சியத்தில் அமுதா என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்றுள்ளேன் என்று சொல்லியுள்ள நிலையில், புகார்தாரரும், பாதிக்கப்பட்ட குழந்தையின் தாயாருமான அ.சா.2 அவரின் சாட்சியத்தில்,

> "வெள்ளை பேப்பரில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது."

என்று கூறியிருக்கிறார். அ,சா.2 அளித்துள்ள சாட்சியத்தை பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார் அ.சா.ஆ.2ஆனது அரசு தரப்பில் கூறப்படுவது போல், கூறப்படும் விதத்தில், கூறப்படும் முறையில் அ.சா.1ஆல் கொடுக்கப்பட்டுள்ளதா? என்பதில் சந்தேகம் ஏற்படுகிறது.

17) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, அரசு தரப்பில் சம்பவம் நடந்துள்ளதாக சொல்லப்படும் நாளாக 31.8.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், 02.09.2016 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டு காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதென்றும் அதற்கு ஏற்றுக்கொள்ளும்படியான விளக்கம் எதுவும் அரசு தரப்பில் தெளிவாக எடுத்துவைக்கப்படவில்லை என்றும் இது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றும் எடுத்துரைத்தார். இதனைப்பற்றி பார்க்கும்போது இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையான அ.சா.ஆ.3-ல் சம்பவம் 31.8.2016 ஆம் தேதி 11.00

மணிக்கு நடைபெற்றுள்ளதென்றும், சம்பவத்தைப்பற்றி 02.09.2016ஆம் தேதி 17.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், சம்பவயிடத்திலிருந்து இருக்கன்குடி காவல் நிலையம் சுமார் 3 கிலோ மீட்டர் வட கிழக்கே இருக்கிறதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்கான காரணத்தைப்பற்றி, புகாரை பெற்றுள்ள அ.சா.4 - சார்பு ஆய்வாளரும், வழக்கினை புலன் விசாரணை செய்துள்ள அ.சா.5 காவல் ஆய்வாளரும் அவர்களின் சாட்சியங்களில் எடுத்துரைக்கவில்லை. மேலும் இதனை பற்றி புகார்தாரரான அ.சா.2ம் அவரின் சாட்சியத்தில் தெளிவுபடுத்தவில்லை. எனவே, காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதற்கு ஏற்றுக்கொள்ளும்படியான விளக்கம் எதுவும் அரசு தரப்பில் இல்லாத நிலையில், இதனைப்பொறுத்து எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக அமைந்துள்ளது.

18) குறிப்பாக, எதிரி தான், வழக்குச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதை பற்றி எவ்வித சாட்சியங்களையும், பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1ம், அவரின் தாயாரான அ.சா.2ம் மற்றும் அ.சா.1ன் சகோதரரும், அ.சா.2ன் மகனுமான அ.சா.3ம் சொல்லாமல் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையிலும், அ.சா.1ன் கூற்றிற்கு ஆதரவான மருத்துவ சாட்சியம் இவ்வழக்கில் தெளிவாக அமையாத நிலையிலும், அரசு தரப்பின் கூற்றிற்கு ஆதரவான மற்ற சாட்சியங்களும் இவ்வழக்கில் தெளிவாக எடுத்துரைக்கப்படாத நிலையிலும், இவ்வழக்கில் முதல் விசாரணை செய்துள்ள அ.சா.4 சார்பு ஆய்வாளர் மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 - காவல் ஆய்வாளர் ஆகியோர் அளித்துள்ள சாட்சியங்களை மட்டும் வைத்து, எதிரி தான் அரசு தரப்பில் கூறப்படுவதுபோல் குற்றச்செயல்களில் ஈடுபட்டாரென்று கருதமுடியாது.

19) மேலும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012 பிரிவு **29** - ல், குறிப்பிட்ட குற்றங்களுக்கான அனுமானத்தை கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதில், மேற்படி சட்டத்தின் பிரிவுகள் **3, 5** ம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த வழக்கில் எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றம் செய்தார் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில், எதிரி தான் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றம் செய்துள்ளார் என்று அனுமானிக்க முடியாது. மேலும் மேற்படி சட்டத்தின் பிரிவு **30 -** ன் கீழும் அந்த குற்றத்தை செய்யக்கூடிய மனநிலையும் எதிரிக்கு இருக்கவில்லை என்பதும் தெளிவாக விளங்குகிறது.

20) முன் பாராக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களிலிருந்தும், அரசு தரப்பில் எடுத்து வைக்கப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களிலிருந்தும், எதிரி தான் பாதிக்கப்பட்ட குழந்தையாக சொல்லப்படும் அ.சா.1 ஐ கடத்திச் சென்று, மறைத்து வைத்து, திருமணம் செய்து கொண்டு, அ.சா.1வுடன் பலமுறை உடலுறவு கொண்டார் என்பதற்கு, தகுதியான சாட்சியங்கள் இல்லை என்றும் எனவே, எதிரியின் மீது இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை

திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கத்தக்கது என்றும் தீர்மானிக்கப்பட்டு இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, எதிரியை இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2018ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)ஏ.லியாகத் அலி,
அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
விருதுநகர் மாவட்டம்.(இருப்பு)
ஸ்ரீவில்லிபுத்தூர்.

இடம் - ஸ்ரீவில்லிபுத்தூர்,
நாள் - 03.11.2018.

**1)அரசுத்தரப்பு சாட்சிகள்:**

அ.சா.1 பாதிக்கப்பட்ட குழந்தை
அ.சா.2 திருமதி.அமுதா,
அ.சா.3 திரு.இருளப்பசாமி,
அ.சா.4 திருமதி.சுமதி, சார்பு ஆய்வாளர்,
அ.சா.5 திரு.முத்து, காவல் ஆய்வாளர்.

**2) அரசுத்தரப்பு சான்றாவணங்கள் :**

அ.சா.ஆ.1 புகாரில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்.
அ.சா.ஆ.2 புகார் மனு.
அ.சா.ஆ.3 அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை.
அ.சா.ஆ.4 பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 வரைபடம்

அ.சா.ஆ.6 ̇ சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

அ.சா.ஆ.7 பாதிக்கப்பட்ட குழந்தையினுடைய விபத்து பதிவேட்டு நகல்.

அ.சா.ஆ.8 எதிரியின் விபத்து பதிவேட்டு நகல்.

அ.சா.ஆ.9 குவிமுச பிரிவு 164ன் கீழான வாக்குமூலம்.

அ.சா.ஆ.10 உயிரியில் அறிக்கை

அ.சா.ஆ.11 குருதி வடிநீரியல் அறிக்கை

அ.சா.ஆ.12 பாதிக்கப்பட்ட குழந்தை பிறந்த தேதி குறித்த சான்றிதழ்

அ.சா.ஆ.13 ̇ சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**3)அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுப்பொருட்கள் :- இல்லை.**

**4) எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள் - இல்லை.**

(ஒம்)ஏ.லியாகத் அலி,

இடம் - ஸ்ரீவில்லிபுத்தூர்,
நாள் - 03.11.2018.

அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
விருதுநகர் மாவட்டம்.(இருப்பு)
ஸ்ரீவில்லிபுத்தூர்.

/ உண்மை நகல் /

அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

விரைவு மகளிா் நீதிமன்றம்.
விருதுநகர் மாவட்டம்
(இ) ஸ்ரீவில்லிபுத்தூா்,
சிறப்பு அமா்வு வழக்கு எண்.01/2018
சீரான / வரைவு தீா்ப்புரை
நாள்.03.11.2018.

**<u>சிறப்பு அமர்வு வழக்கு எண்.01/2018</u>**

**<u>நாள்.03.11.2018</u>**

எதிரி ஆஜர். தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது. முடிவாக, எதிரியை இதச பிரிவுகள் 366-ஏ, 368, குழந்தை திருமண தடைச்சட்டம் பிரிவு 9 மற்றும் குழந்தைகளை பாலியல் குற்றங்களிலிருந்து பாதுகாக்கும் சட்டம் பிரிவுகள் 4 உ/இ 3, 6 உ/இ 5(l) ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

அமர்வு நீதிபதி,
விரைவு மகளிர் நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

**Spl.SC No.01/2018**

**Date:3.11.2018**

Accused present. The Judgment is pronounced in the open Court. In result, the accused is not found guilty for the offences punishable u/s 366-A, 368 of IPC and section 9 of Prohibition of Child Marriage Act and sections 4 r/w 3, 6 r/w 5(l) of the Protection of Children from Sexual Offences Act and he is acquitted u/s 235(1) of Cr.P.C. No case properties are produced in this case.